
பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 32 செவ்வாய்க்கிழமை 16.07.2024 அதிர்வு 350

## மனித எலும்புக்கூடுகள் கொழும்பில் கண்டுபிடிப்பு

**பொலிஸார் தீவிர விசாரணை**



கொழும்பு – கோட்டை யில் உள்ள பழைய செய லகத்துக்கு அருகில் உள்ள சுற்றுவட்டப் பகுதியில் இருந்து 04



# ராஜபக்ஷக்களை பாதுகாக்கமாட்டேன்!

## தாய்வீடு திரும்புங்கள் என்று சஜித்துக்கு ரணில் அழைப்பு

"எனக்கு ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் கிடையாது. ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை வந்த போது அவரை மட்டுமே பாதுகாத்துள்ளேன்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 04



## இன்று முதல் மின் கட்டணம் 22.5 சதவீதத்தால் குறைப்பு



இன்று முதல் அமுலாகும் வகையில் மின் கட்டணத்தை 22.5 சதவீதத்தால் குறைப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை அண்மையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பியிருந்தது.

இதற்கமைய, 0 முதல் 30 வரையான மின் அலகு ஒன்றின் கட்டணம் 2 ரூபாவாலும், 30 முதல் 60 வரையான அலகு ஒன்றின் கட்டணம் 11 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

60 முதல் 90 வரையான அலகு ஒன் றின் கட்டணம் 12 ரூபாவாலும், 90 முதல் 120 வரையிலான அலகு ஒன்றின் கட்டணம் 20 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது என்று 04



நேற்றைய என் பக்தியின் தொடர் இன்றையது.

நரித் தந்திரசாலியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மற்றொரு கட்சிக்குள் புகுந்து விளையாடுகின்றார் என்றால், சத்தம் சந்தடியின்றி சம்பந்தப்பட்ட எதிரெதிர் தரப்புக்களுடன் ஒரே சமயத்தில் ஊடாடுவார்.

இப்போது தமிழரசுக்குள்ளும் அப்படித்தான். ஒருபுறம் சுமந்திரன் - சாணக்கியன் இணையுடன் பேச்சு என்றால், மறுபுறத்திலும் அது நடக்கின்றது. ஒரு பக்கத்தில்தான் தகவல் கசிகின்றது. மற்ற பக்கம் கனகச்சிதமாக - மிகவும் கமுக்கமாக - நடக்கின்றது என்றுதான் அர்த்தம். 04




# மூன்றரைக் கோடி ரூபா செலவில் ஸ்கான் இயந்திரம் சிவபூமி அறக்கட்டளை ஏற்பாட்டில் கிடைக்கின்றது

யாழ்போதனா வைத்தியசாலை, யாழ் மருத்துவபீடம், சிவபூமி அறக் கட்டளையுடன் இணைந்து நடத்தும் பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்துக்கு சுமார் 35 மில்லியன் ருபா செலவில் அல்ட்ராச வுண்ட் ஸ்கான் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டு நாளை 17/7/2024 மாலை3.00மணிக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர் களால் கையளிக்கப்படவுள்ளது.

லண்டன் ‘அபயம்’ அறக்கட்டளை யிடம் ஆறு திருமுருகன் விடுத்த வேண்டுதலால் இக்கருவி கிடைத் துள்ளது. இக்கருவிக்கான முழுச் செலவையும் திரு.சதா.மங்களேஸ்வரன் சகோதரர்கள் ‘அபயம்’ ஊடாக வழங்கியுள்ளனர். மங்களேஸ்வரன் யாழ் இந்துக்கல்லூரியில் ஆறு.திருமுருகன் அவர்களோடு கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# மின் கட்டணக் குறைப்பு காரணமாக உணவுகளின் விலைகளும் குறைப்பு

மின்சார கட்டணம் குறைக்கப்படும் நிலையில், உடன் அமுலாகும் வகையில் உணவுப் பொருள்கள் சிலவற்றின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விருந்தக உரிமை யாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி, ப்ரைட் ரைஸ், கொத்து என்பன 25 ரூபாவி னால் குறைக்கப்பட்டுள்ளன.

பராட்டா, முட்டை ரொட்டி மற்றும் சிற்றுண்டிகள் என்பன 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளன.



# இரு பஸ்கள் மோதி விபத்து!

## 10 இற்கும் மேற்பட்டோர் காயம்

கொஸ்வத்தை, தலங்கம பிரதேசத் தில் நேற்றுப் பிற்பகல் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் பத்துக்கும் மேற் பட்டோர் காயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மீகொட – புறக்கோட்டை இடையே பயணிக்கும் 190 இலக்க பஸ்ஸும், கொள்ளுப்பிட்டிக்கு இடையில் பயணிக் கும் 177 இலக்க பஸ்ஸுமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

கடுவெலயில் இருந்து கொள்ளுப் பிட்டி நோக்கிப் பயணித்த பஸ், புறக்கோட்டை நோக்கிப் பயணித்த மீகொட பஸ்ஸின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.

# ரணில் தலைமையிலான அரசு மீளவும் தோற்றம் பெற வேண்டும்

## திஸாநாயக்க எம்.பி. வலியுறுத்து

இலங்கையின் எதிர்காலத்துக்காக வேனும் ஜனாதிபதி தலைமையிலான அரசு மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்று ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்ததாவது:-

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியின் போது நாடு வங்குரோத்து நிலையடைய வில்லை என்பதை அரசியலுக்கு அப் பாற்பட்ட வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். நெருக்கடியான சூழ்நிலை யில் அரசைப் பொறுப்பேற்று சவால் களை வெற்றி கொண்டுள்ளார்.




கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான பொருளாதார தாக்கத்தை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தனர். ஜனாதிபதி செய லகத்தின் முன்பாக போதைப்பொருள் பாவனையாளர்கள் கூடாரமிட்டு தேசிய பாதுகாப்பையும் சட்டவாட்சியையும் கேள்விக்குள்ளாக்கினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022ஆம் ஆண்டு போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வராமலிருந்தி ருந்தால் நாடு மிக மோசமான நெருக் கடிகளை எதிர்கொண்டிருக்கும். போராட் டக்காரர்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டு பயங்கரவாதிகளைப் போன்று செயற்பட்டவர்களை அடக்கிய ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தனியார் வியாபாரிகளைக் கண்டு அச்சமடையப் போவதில்லை.

ஜனாதிபதியின் சிறந்த திட்டங்களால் குறுகிய காலத்தில் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளது. தற்போதைய முன்னேற்றங்களைத் தொடர வேண்டுமாயின் நாட்டின் எதிர் காலத்துக்காகவேனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தோற்றம் பெற வேண்டும்." – என்றார்.

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

## பலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்

லொறி – வான் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தம்புள்ளையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறி ஒன்று சாரதி உறங்கியதால் எதிர்த்திசையில் பயணித்த சிறிய வான் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது வானில் பயணித்த பலர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர் களே காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக ஒலுவில் நோக்கிப் பயணித்த வானே இவ்வாறு விபத்துக் குள்ளாகியுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வந்து விடப் போகின்றார் என்பதுதான் பிந்திய - உறுதியான - நிலைமை. அந்த உத்தேசச் சட்டத்தில்தான் - அதன் வடிவத்தில்தான் - தமிழரசைக் கையாளும் ரணிலின் நரித் தந்திரம் தங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தை இந்த ஓகஸ்டில் ரணிலின் அரசு நிறைவேற்றி விட்டால், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வென்றாலும் தோற்றாலும், ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் மாகாண சபை தேர்தல் நிச்சயம் நடக்கும். பழைய தேர்தல் சட்டப்படி அவற்றை நடத்துவதற்கான அதிகாரம் அந்தச் சட்டம் வந்த உடனேயே தேர்தல் ஆணையத்துக்கு வந்துவிடும்.

இந்த மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வருவதற்கான தனிநபர் சட்டமூலம் சுமந்திரனினால் சமர்ப்பிக்கப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, உயர் நீதிமன்றம் விசாரித்து தீர்மானித்த பின்னர், கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது என்பது தெரிந்ததே.

அதை மீள எடுத்து, நாடாளுமன்றத்தில் விசாரித்து, நிறைவேற்றி, அதன் மூலம் பழைய மாகாண சபை தேர்தல் சட்டத்திற்கு உயிர் கொடுப்பதுதான் ஏற்பாடு. அது குறித்து சுமந்திரனுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடத்திய பேச்சுக்களில் அப்படித்தான் தீர்மானமாகி இருப்பதாக சுமந்திரன் நம்பி கொண்டிருந்தார்.

ஆனால், கடந்த ஞாயிறுக்கு முதல் ஞாயிறு, திருகோணமலையில் சம்பந்தனின் இறுதி நிகழ்வில், ஜனாதிபதி ரணில் ஆற்றிய உரையில்தான் புதிய நெருடல் - செருகல் - வெளிவந்தன.

அந்தப் பழைய சட்டத்துக்கு சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க. இளைஞர்கள், யுவதிகளுக்கு மாகாண சபைகளில் அதிக இடம் அளித்தல், எம்.பிக்கள் அந்த பதவியில் இருந்தபடியே மாகாண சபைத் தேர்தல்களிலும் போட்டியிடுதல் ஆகியன சட்டத் திருத்தமாகக் கொண்டுவரப்படும் என்றார் ரணில்.

ரணிலின் திட்டப்படி சட்டம் வரப் போகின்றது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் மாகாண சபைத் தேர்தல் பெரும்பாலும் நடக்கும். ரணில் வென்றால் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது.

எம்.பியாக இருப்பவர் அப்படியே இருந்து கொண்டு மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடலாம். முதலமைச்சராகவும் வரலாம்.

இந்த ஏற்பாடு சுமந்திரனுடன் பேசப்படாமல் ரணில் கொண்டுவரும் சட்டத் திருத்தம் - சிறிதரன் தரப்பின் ஆதரவையும் பெறுவதற்காக.

பிறகு என்ன? குறுநில மன்னராக இருந்து கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாண சபைக்கு போட்டியிடுவார் எம்.பி. cum முதலமைச்சர்.

முதலமைச்சர் பதவி அடுத்த ஐந்து, ஆறு மாதங்களில் கைக்கு வரும் என்றால், கட்சித் தலைவர் பதவி யாருக்கும் போகாமல் கொஞ்ச காலம் அப்படியே இழுபட்டு அந்தரத்தில் தொங்கி விட்டு போகட்டுமே என்பது தான் குறுநில மன்னரின் எண்ணம் போலும்.

'பாவம், கட்சித் தலைவராகத் தேர்வாகியும் அதைப் பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. முதலமைச்சர் பதவியாவது கிடைக்கட்டுமே' என்ற பச்சாதாபமாவது கிடைப்பதற்கு அது வழி செய்யாதா என்ற சிந்தனையும் இதில் பொதிந்துள்ளது.

விக்னேஸ்வரனே ஐந்து வருடங்கள் முதலமைச்சராக இருந்து விட்டுப் போய்விட்டார். அந்த இடத்துக்கு குறுநில மன்னர் வருவது என்ன குறையா? போதாக்குறைக்கு தமது கட்சியின் தேசிய மாநாட்டுக்கு குறுநில மன்னரைத்தான் பிரதம விருந்தினராக அழைத்திருக்கிறார் விக்கியர்.

முன்னாள் முதலமைச்சர் பின்னாளில் வரப் போகின்ற முதலமைச்சரை வரவேற்கப் போகின்றார். அவ்வளவுதான்.

சொல்லின் செல்வர் செல்லையா இராஜதுரை ஒரு காலத்தில் மட்டக்களப்பு மாநகரத்தின் முதலாவது மேயராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஒரே சமயத்தில் இருந்தார். அப்படித்தான் நமது குறுநில மன்னருக்கும் எம்.பி - முதலமைச்சர் வாய்ப்போ தெரியவில்லை.

கட்சியில் சர்சைக்குரியவர்களில் ஒருவர் கைதடியிலும் மற்றையவர் கோட்டே சிறி ஜெயவர்த்தனபுரத்திலும் தத்தமது குப்பைகளைக் கொட்டிக் கொண்டிருந்தால் கட்சிச் சர்ச்சை - குழப்பம் - வீரியம் - குன்றுமோ என்னவோ... ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

வழக்கை விரைந்து முடித்து, கட்சியின் தேசிய மாநாட்டை உடன் நடத்த வேண்டும் என்று ஆரம்பத்தில் துடித்த குறுநில மன்னர், இப்போது ஏன் இழுத்தடிப்புப் பாணிக்குள் இறங்கி விட்டிருக்கின்றார் என்பதை வாசகர்கள் இப்போது புரிந்து கொள்வார்கள்.

எங்கள் பத்திரிகைகளைப் பார்ப்பதில்லை, அதன் தொடர்பிலக்கங்களை எல்லாம் துண்டித்து விட்டேன் என்று போகுமிடங்களில் குறுநில மன்னர் புலம்பினாலும், அவர் செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அவர் அறிந்து கொண்டுதான் இருக்கின்றார். நமது சூட்சுமத் திட்டங்களை இந்தப் பத்தியாளர் எப்படி நேரத்துடன் அறிகின்றார் என்ற குடைச்சல் அவருக்கு நிச்சயம் இருக்கும் என்பது உறுதி.

## ராஜபக்ஷக்களை...

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"கட்சியைவிட தாய்நாடுதான் எமக்கு முக்கியம். தாய் நாட்டை நேசித்துவிட்டு தான் நாம் கட்சியை நேசிப்போம். ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் செயற்பட்டுள்ளனர்.

நம்பிக்கையின் அடிப்படையில்தான் சவாலை நான் பொறுப்பேற்றேன். அதற்கு மொட்டுக் கட்சிலும் ஆதரவு வழங்கியது. அந்தக் கட்சியின் ஆதரவு இருந்ததால்தான் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடிந்தது.

மொட்டுக் கட்சியில் இருந்து ஒரு பிரிவினர் பிரிந்து சென்றனர். மஹிந்த பக்கம் பெரும்பான்மை இருந்தது. பீரிஸ் அணியினர் நல்லவர்களாம், ராஜபக்ஷக்கள் கெட்டவர்களாம். ராஜபக்ஷக்கள் கெட்டவர்களெனில், பீரிஸ் தரப்பினரும் கெட்டவர்கள்தான்.

எனக்கு ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு கிடையாது, ரணசிங்க பிரேமதாஸவை மட்டுமே நான் பாதுகாத்துள்ளேன். கட்சியில் குற்றப் பிரேரணை வந்தபோது அவருக்கு ஆதரவாக நானே முன்னின்றேன். வேறு எவரையும் நான் பாதுகாத்து கிடையாது.

எனவே, நாட்டைப் பாதுகாக்க முன் வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அழைப்பு விடுக்கின்றேன். அதேபோல் தடை செய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தை சஜித்துக்கு வழங்கத் தயார். ஆகவே, நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் இணையுமாறு அழைக்கின்றேன்." – என்றார்.

## மனித...

மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுக நகர நெடுஞ்சாலையுடன் இணைக்கப்பட்ட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின்போது இந்த எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களால் கிட்டத்தட்ட 6 அடிக்குக் கீழிருந்து குறித்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதுடன், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

நீதிவான் நீதிமன்ற விசாரணைக்குத் திட்டமிடப்பட்ட நிலையில், அந்த இடத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொழும்பு துறைமுகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இன்று முதல்...

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, வீட்டுப் பாவனை மின் கட்டணம் 27 சதவீதத்தாலும், மதஸ்தலங்களுக்கான மின் கட்டணம் 30 சதவீதத்தாலும், விருந்தகங்கள் மற்றும் கைத்தொழிற்துறைக்கான கட்டணம் 25 சதவீதத்தாலும் குறைவடைகின்றது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிரேமதாஸ பிராயச்சித்தம்

மன்னாரில் நேற்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியை அவரது கட்சி அலுவலகத்தில் சந்தித்த பின்னர் தகவல் வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சில விடயங்களை கூறியிருக்கிறார்.

13 ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்றெல்லாம் அவர் குறிப்பிட்டவை வரவேற்கத்தக்கவை.

எனினும் அந்தக் கருத்துக்களுக்கு இடையே அவர் கூறிய ஒரு விடயம் தொடர்பில் உண்மை நிலையை தெளிவுபடுத்தி, சரித்திரத்தைத் தவறாகப் பதியாமல் அதை ஒழுங்குப்படுத்தி, சில உண்மைகளை அரசியலில் இளைஞரான அவர் போன்றோருக்கும் தெளிவுபடுத்துவது நமது கடப்பாடாகின்றது.

மறைந்த தனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ மாகாண சபையை இல்லாத ஒழிப்பதற்கு ஒருபோதும் முயலவில்லை என்று உரைத்திருக்கிறார் மகன் சஜித் பிரேமதாஸ.

ஒரு வகையில் இது உண்மை என்றாலும், அதையும் தாண்டி இரண்டு விடயங்கள் இதற்குள் புதைந்திருப்பதை அவருக்கு விவரித்து நினைவு படுத்த வேண்டி உள்ளது.

ஒன்று - ரணசிங்க பிரேமதாஸவின் மன விருப்பத்தோடு 13 ஆவது திருத்தம் வந்தது அல்ல. மாறாக, அதனை முதலில் பெரியளவில் நலிவுபடுத்தியவரே அவர்தான்.

அடுத்தது - 13ஆம் திருத்தத்தை இல்லாதொழிக்கும் துணிவு இந்த 34 வருடங்களில் ரணசிங்க பிரேமதாஸ உட்பட எந்தத் தலைவருக்கும் வந்ததில்லை. அதில் இறங்க முயன்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கு உரிய முறையில், உரிய தருணத்தில் குட்டுப் போட்டு அந்த முயற்சி அடக்கப்பட்டது.

1987இல் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம், அதன் பயனாகப் பிறந்த அரசமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டம், மாகாண சபைகள் சட்டம் போன்றவை எவற்றையும் மனச்சுத்தியோடு, வரவேற்று செயல்பட்டவர் அல்லர் ரணசிங்க பிரேமதாஸ. பிரதமர் என்று கூட்டுப் பொறுப்புக் கருதி, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு பின்னால் அவர் இழுபட வேண்டி இருந்தது. அவர் தாம் கடும் எதிர்ப்பு, அதிருப்தி, குழப்பம் காட்டியபடிதான் அவற்றை ஜே.ஆர். முன்னெடுக்கப் பார்த்திருந்தார். ஒருவகையில் பார்த்தால் ஜே.ஆர். கூட முழு உளப்பூர்வமான எண்ணத்தில் அவற்றை முன்னெடுக்கவில்லை. இந்தியாவின் கடும் அழுத்தத்தால் அப்படி அவர் செய்ய வேண்டி நேர்ந்தது.

மாகாண சபைகளிடமிருந்து அதிகாரங்களை முதன் முதலில் பெரிய அளவில் பறித்தவர் ரணசிங்க பிரேமதாஸதான். அவர் ஜனாதிபதியாக இருந்தபோது கொண்டுவரப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க அதிகாரங்கள் கைமாற்றும் சட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்கள், பிரதேச செயலாளர்கள் முறைமை உருவாக்கப்பட்டு, அவை நேரடியாக மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டன. அவற்றின் மூலம் தான் மாகாணங்களின் பிரதேச நிர்வாகங்கள் மத்திய அரசினால் பறிக்கப்பட்டன.

மாகாண சபைகளைக் குட்டிசுவராக்கிய முதல் சிங்களச் சிற்பி ரணசிங்க பிரேமதாஸதான் என்ற உண்மையை மகன் சஜித் பிரேமதாஸ மறக்காமல் இருப்பதுடன், அப்பாவின் பாவத்துக்கு இப்போது 32 ஆண்டுகள் கடந்து பிள்ளையாக பிராயச்சித்தம் செய்ய முன்வர வேண்டும். அப்போதாவது பாப விமோசனம் கிடைக்குமோ தெரியவில்லை.

அடுத்து 13 ஆம் திருத்தத்தை ஒழித்தல். 2011 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தீர்வு தொடர்பாக 18 சுற்று பேச்சுக்களை மஹிந்த ராஜபக்ஷ அரசு நடத்தியது. எடுத்த முடிவுகளை அரசு தரப்பு நடைமுறைப் படுத்தாத நிலையில் பேச்சுக்கள் இடையில் தடைப்பட்டன.

சீற்றமடைந்த மஹிந்த ராஜபக்ஷ மாகாண சபைகள் முறைமையையே அரசமைப்பில் இருந்து நீக்க முடிவு எடுத்துக் காய் நகர்த்தினார். அதற்கான பலம் நாடாளுமன்றத்தில் அவரிடம் இருந்தது.

கூட்டமைப்பினர் இந்தியாவுக்கு விசேட செய்தியை அனுப்பினர். அடுத்த நாள்களில் இந்தியாவின் விசேட விமானப்படை விமானத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கின் பிரத்தியேகச் செய்தியுடன் வெளியுறச் செயலாளர் சிவசங்கர் மேனன் கொழும்புக்கு வந்திறங்கினார். நேரடியாகச் சென்று மஹிந்தவை சந்தித்தார். இந்தியப் பிரதமரின் விசேட செய்தியை கையளித்தார். இந்தியா கடும் நடவடிக்கை எடுக்கும் என எச்சரிக்கை வாசகம் அதிலிருந்தது. அடுத்த நாள் சம்பந்தனைத் தனித்து விருந்துக்கு அழைத்தார் மஹிந்தர். 'அன்புடன்' குசலம் விசாரித்து அரவணைத்தார். அரசு - கூட்டமைப்பு பேச்சு மீள ஆரம்பமாகியது.

இது 13 ஐ முற்றாக ஒழிக்க முயன்றவரின் கடந்த கால சரிதச் சுருக்கம்.

இப்போது இந்த விடயத்தில் இறங்க முனையும் மகன் சஜித்துக்கு இந்த விவகாரங்கள் பற்றிய தகவல்கள் சமர்ப்பபணம்.





# சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி நாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்

"சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி நாட்டைப் பற்றி சிந்திக்கும் அரசியல் கலாச்சாரம் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமானது. ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்பை குறைத்து மதிப்பிட முடியாது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டின் அரசியல் கலாச்சாரம் மாறிவிட்டது. நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு குழு உருவானது. அவர்கள் சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி செயல்பட்டனர். எனவே, எந்தக் கட்சியையும் சாராதவர்களும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இந்த இடத்தில் உள்ளனர். 2022 மே 09 ஆம் திகதி நடந்த சம்பவத்தைப் பற்றி நான் மீண்டும் குறிப்பிடத் தேவையில்லை. நாட்டு மக்கள் ஒடுக்கப்பட்டதால், போராட்டங்கள் வெடித்தன. இந்த பிரச்சாரங்களை சிலர் பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். இறுதியில் சம்பிரதாய கட்சிகளால் நாட்டின் தலைமைத்துவத்திற்கு வர முடியாத நிலை ஏற்பட்டது.

2021 டிசம்பர் 2021 இல் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாட்டில் இவ்வாறானதொரு பிரச்சினை இருப்பதாகவும், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு அறிவிக்குமாறும் அவர் என்னிடம் கூறினார். இதனை நான் அப்போதைய ஜனாதிபதிக்கு அறிவித்தேன். உலக வங்கிப் பிரதிநிதிகள் இங்கு வந்த போதும் இதுபற்றி ஆராய்த்தோம். இதே வேளை, இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறு கருத்துக்களை முன்வைத்தன.

இந்தக் கூட்டத்திற்கு தமிழ் கூட்டணியின் இரா. சம்பந்தன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் மாத்திரமே வருகை தந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நான் மாத்திரமே பங்கேற்றேன். மற்ற எதிர்க்கட்சிகள் இதில் பங்கேற்கவில்லை. அது தவறான செயல் என்றே சொல்ல வேண்டும்.

அந்த சமயத்தில் நாட்டில் பாரிய நெருக்கடி நிலை இருந்தது. அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்வது நம் அனைவரின் பொறுப்பாக இருந்தது. அந்தப் பொறுப்பை யாராலும் தவிர்க்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவர்தான் மாற்றுப் பிரதமர். அவர் பஸ் டிரைவர் அல்லர். எனவே, இதில் பங்கேற்க வேண்டிய பொறுப்பு அவருக்கு இருந்தது. ஆனால் எந்த ஒரு அரசியல் கட்சியும் அன்றிருந்த நெருக்கடி தொடர்பில் செயற்பட முன்வரவில்லை.

அதன்பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மே மாதம் 9 ஆம் திகதி பதவி விலகினார். அப்போது ஆட்சி அதிகாரத்தை தக்கவைக்கும் நிலையில் மொட்டுக் கட்சி இருக்கவில்லை. அந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர். நாங்கள் பிரிட்டிஷ் முறையைப் பற்றி பேசுவதால், மாற்று பிரதமர் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும்.

தொடர்ச்சி▼













# சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி நாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்

தொடர்ச்சி▲

மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்தால், சம்பிரதாயப் படி எதிர்க்கட்சித் தலைவருக்கே முதல் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என பலரும் தெரிவித்தனர். அது தொடர்பில் எனக்கு எந்த பிரச்சினையும் கிடையாது. யாராக இருந்தாலும் உதவத் தயார் என நான் அன்று கூறினேன். ஆனால், மே 10 ஆம் திகதி பொறுப்பேற்க வருமாறு அறிவிக்கப்பட்டும் அவர் வரவில்லை. பிரதமர் பதவியை ஏற்பதில்லை என முடிவு செய்திருந்தனர். அவர் தனது கடமையை நிறைவேற்றவில்லை. குறுகிய அரசியல் நோக்கில் செயற்பட முயன்றதால் அவரால் முன்நோக்கி வர முடியவில்லை.

வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது நாட்டை எவ்வாறு மீட்பது என்பது குறித்து சிலர் யோசனைகளை முன்வைத்தனர். ஆனால் பொறுப்பு தேடிவந்த போது ஏற்க விரும்பவில்லை. ஜே.வி.பி. இதற்காக முயற்சி கூட எடுக்க வில்லை. ஆனால் இந்த பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டோம். அப்போது, நாடு வங்குரோத்தடைந்துள்ளதாக அறிவிக் கப்பட்டிருந்தது. அந்நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஜனாதிபதி பதவியில் யார் இருக்கிறார் என்பதை நான் பொருட் படுத்தவில்லை. ஆனால் அந்த நேரத்தில் நான் நாட்டைக் காப்பாற்ற விரும்பினேன்.

அந்த சமயத்தில் இவ்வாறான சவால்களை நாம் எதிர்கொண்டிருந்தோம். 1971 கிளர்ச்சியின் போது ஜே.ஆர். ஜெயவர்தன எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு வழங்கினார். அவரது மகனைக் கூட ஒரு சந்தர்ப்பத்தில் கைது செய்தார். ஆனால் நிலைப்பாட்டை மாற்றவில்லை. 1989 ஆம் ஆண்டில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு



ஆதரவளிப்பதாக சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் அமைச்சர் ரத்வத்த ஆகியோர் ஜனாதிபதி பிரேமதாஸ விற்கு அறிவித்திருந்தார்கள். இது தொடர்பில் நாம் நடவடிக்கை மேற்கொண்ட பின்னர் எங்களைக் குறை கூறாதீர்கள் என்று அன்றிருந்த இராணுவத் தளபதி கூறியிருந்தார். அவர்கள் இருவரும் உடன்பாடு தெரிவித்திருந்தனர். இவ்வாறே நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடி செயற்பட்டிருக்கிறோம்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது சிறிமாவோ பண்டாரநாயக்கவும் டட்லி சேனாநாயக்கவும் இணைந்து செயற்பட்டனர். ஏனைய சந்தர்ப்பங்களில் மோதல்கள் இருந்தன. ஆனால் அது ஒரு பிரச்சினை அல்ல. ஆசியாவிலேயே வெற்றி பெற்றவருக்கு அதிகாரத்தை கையளித்துவிட்டு தேர்தல் முடிவுகளின்படி வெளியேறும் ஒரே நாடு இலங்கை. நீதித்துறை சுதந்திரம் பற்றி எவ்வளவோ பேசினாலும் இலங்கையில் தான் நீதித்துறை செயற் படுத்தப்படுகிறது. இந்திரா காந்தியின் ஆட்சியின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றத்தில் எழுந்த பிரச்சினைகளை நாம் அறிவோம்." – என்றார்.











# மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த இருவர் கைது

(மஸ்கெலியா நிருபர்)

நேற்று முன்தினம் மாலை பொகவந்தலாவ பொலிஸார் பிரைட்வெல் பகுதியில் மேற் கொண்ட சுற்றி வளைப்பின் போது சட்ட விரோதமாக – அனுமதிப் ல்பத்திரம் இன்றி – மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த இருவர் கைதாகினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் 27 வயது உடையவர்கள் எனவும் அவர்கள் இருவரும் பிரைட்வெல் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர் .

விசாரணையின் பின்னர் இருவரையும் பொலிஸார் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளனர்.

# அட்டன் – நுவரெலியா பிரதான வீதியை அவதானமாகப் பயன்படுத்தக் கோரிக்கை



(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக அட்டன் நுவரெலியா பிரதான வீதியைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலையால் மக்கள் பல்வேறு சௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா பங்களாவத்தை பகுதியில் நிலவும் கடும் பனி மூட்டம் காரணமாக வாகனங்களை செலுத்தும் வாகன சாரதிகள் வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிர விட்டு வாகனங்களை செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பிரதான வீதிகளின் இருபுறமும் பாரிய மரங்கள், பாறைகள், மண்மேடுகள் சரிந்து விழும் அபாயம் உள்ளதால், மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# ‘13’ முழுமையாகவே அமுல் மீனவர் பிரச்சினைக்கும் தீர்வு

## சஜித் மன்னாரில் அறிவிப்பு செல்வத்தைச் சந்தித்த பின்



(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டின் நீதி புத்தகத்தில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல் படுத்துவேன். எமது கடல் வளங்கள் கொள்ளையிடபடுகின்றதை தடுக்கும் வகையில் நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க உள்ளேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வகையில் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அவர் மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அலுவலகத்திற்குச் சென்று கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

கலந்துரையாடல் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னாரின் அபிவிருத்திக்காக மீண்டும் ஒரு முறை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளேன். வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு வழங்குவதே எனது நோக்கமாக உள்ளது.

மேலும் முக்கியமாக நாட்டின் நீதி புத்தகத்தில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன். மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுக்கவுள்ளேன். எமது கடல் வளங்கள் கொள்ளையிடப்படுகின்றதைத் தடுக்கும் வகையில் நிறந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கவுள்ளேன். வடக்கு மக்களின் அரசியல் உரிமை. சமூக உரிமை, பொருளாதார உரிமை, மனித உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் செயல்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளேன்.

இன,மத வேறுபாடு களுக்கு அப்பால் ஒரு தாய் பிள்ளைகள் போல் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, இந்த நாட்டை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல உள்ளேன். இந்த நாடு வங்குரோத்து அடைந்த நிலையில் உள்ளது. அதற்கு நாங்கள் ஒரு தாய் பிள்ளைகள் போன்று தீர்வை பெற்றுக் கொள்வது அவசியம்.

மன்னார் மாவட்டம் இன்றி வடக்கு,,கிழக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கான சிறந்த திட்டங்கள் இலங்கை முழுவதும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டங்களை கொண்டு வர இருக்கிறேன்.

நுண்கடன் திட்டம் ஊடாக பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அவர்களை மையப்படுத்தி நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளேன்.

மீனவர்களின் பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளமையோடு அதை வடக்கு கிழக்கை மையப்படுத்தி தீர்வை பெற்றுத் தருவேன்.

மாகாணசபை முறைமையை வலுப்படுத்தி அதை நிச்சயமாக பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமையோடு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

மறைந்த எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாச அவர்கள் மாகாண சபையை இல்லாது ஒழிப்பதற்கு ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

அதே போன்று மாகாண சபை கட்டமைப்பை பாதுகாக்கவும் முயற்சிகளை மேற்கொள்ளுவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.







# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இழப்பீட்டை மைத்திரி ஓகஸ்ட 30 இற்கு முன் செலுத்தி முடிக்க உத்தரவு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டீ. நவாஸ், குமுதுனி விக்கிரமசிங்க, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாகச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்ட 100 மில்லியன் ரூபாவில் 58 மில்லியன் ரூபா ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

எஞ்சிய தொகையைச் செலுத்துவதற்கு 6 வருடங்கள் கால அவகாசம் வழங்குமாறும் முன்னாள் ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றமையின் பின்னர், பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தாக்கல் செய்த சில அடிப்படை மனுக்கள் மீதான விசாரணையை நிறைவு செய்த உயர் நீதிமன்றம், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு செலுத்தப்பட வேண்டுமென 2023 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, சிசிர மெண்டிஸ், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோ ஆகியோருக்கு இந்த உத்தரவு வழங்கப்பட்டது.



# மேல் மாகாணத்தில் ஓட்டோக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டது

மேல் மாகாணத்தில் நேற்று நள்ளிரவு முதல் ஓட்டோக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது கிலோ மீற்றருக்காக அறவிடப்படும் கட்டணம் 10 ரூபாவினால் குறைக்கப்படும் என அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மேல் மாகாணத்திற்குள் முதலாவது கிலோ மீற்றருக்கான கட்டணம் 100 ரூபா எனவும் இரண்டாவது கிலோ மீற்றர் முதல் 90 ரூபா அறவிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# காலிச் சிறைச்சாலையில் மூளைக்காய்ச்சல் பரவல்: கைதிகளை உறவினர்கள் சந்திக்க அனுமதி மறுப்பு

காலி சிறைச்சாலையில் உள்ள கைதிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் இருப்பதற்கும், உறவினர்களைச் சந்திப்பதற்கான அனுமதியை இடைநிறுத்துவதற்கும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

காலி சிறைச்சாலையின் கைதிகளுக்கிடையே மூளைக் காய்ச்சல் நோய் பரவி வருவதால், இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

காலி சிறைச்சாலையில், மூளைக்காய்ச்சலால் பாதிக் கப்பட்ட கைதியொருவர் உயிரிழந்தார்.

அத்துடன், மூளைக்காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் 3 கைதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சிறைச் சாலைகள் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் தற்போது காலி – கராப்பிட்டிய போதனா வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூளைக்காய்ச்சல் நோயினால் காலி – வந்துரம்ப பகுதி யைச் சேர்ந்த 26 வயதுடையவரே உயிரிழந்தார்.

போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட் டில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.



# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள அறிக் கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெ லியா மற்றும் இரத்தினபுரி ஆகிய 5 மாவட்டங்க ளுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகா ணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத் தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவி யல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகளவிலான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளி லும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங் களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# சர்வதேச கிரிக்கெட் பேரவை மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குத் தீர்மானம்

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் வருடாந்த மாநாட்டை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆசிய வலயத்திலுள்ள நாடொன்றில் இந்த மாநாடு நடத்தப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவென கிரிக்கெட் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்கும் 108 உறுப்பினர்கள் உள்ளிட்ட 220 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசிய கிழக்கு, ஆசிய பசுபிக் வலயம், ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

உலகின் பல நாடுகளிலுள்ள கிரிக்கெட் நிர்வாகிகள், பங்குதாரர்களின் முதன்மையான மாநாடாக கருதப்படும் இந்த மாநாட்டின் போது விளையாட்டின் மூலோபாய நோக்கம், நிர்வாகம், கிரிக்கெட்டின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

ஒலிம்பிக் வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்வதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

அதற்கமைய பன்முகத்தன்மை, அடையாளம், சுற்றுச்சூழல் நிலைபேறு, விளையாட்டு உள்ளிட்ட தலைப்புகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதுடன் மாநாட்டுக்கு இணையாக கூட்டங்கள், செயலமர்வுகள் உள்ளிட்டவற்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பியூமி ஹன்சமாலியை செப்டெம்பர் 20 வரையில் கைது செய்யாமல் இருக்க நீதிமன்றில் இணக்கம்



சூட்சுமமான குற்றச் செயல்கள் மூலம் சொத்துக்களை சம்பாதித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நடிகையும், மொடலுமான பியூமி ஹன்சமாலியை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை கைது செய்யாமல் இருக்க சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று இணக்கம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும்,பியூமி ஹன்சமாலிக்கு எதிரான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும்படி உத்தரவிடுமாறு கோரி பியூமி ஹன்சமாலி தாக்கல் செய்திருந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபிதா ராஜகருணா முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், விசாரணைகள் முடிவடையும் வரை பியூமி ஹன்சமாலியை கைது செய்ய முடியாது என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த மனு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி மீள பரிசீலிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.








# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரமே ‘உறுமய’ திட்டத்தில் நில உரிமை வழங்கப்படுகிறது!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“உறுமய வேலைத் திட்டம் 2002 ஆம், 2003ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம். நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அதனை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. அன்று அந்தத் திட்டத்தை செயல்படுத்தியிருந்தால், 20 வருடங்களுக்கு முன்னர் மக்களுக்கு நிரந்தர காணி உறுதி கிடைத்திருக்கும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஹியங்கனை பொது விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உறுமய நிரந்தரக் காணி உறுதி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

20 லட்சம் நிரந்தர காணி உறுதி வழங்கும் ‘உறுமய’ தேசிய திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் தகுதி பெற்ற 65 ஆயிரத்து 393 பேரில் 662 பேருக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாளமாக சிலருக்கு காணி உறுதிகளை வழங்கி வைத்தார்.

இத்துடன் இணைந்ததாக பதுளை மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்தார். அத்துடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஹியங்கனை பொது விளையாட்டரங்கின் பிரதான கேட்போர் கூடத்தையும் திறந்து வைத்தார்.

உறுமய நிரந்தர காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டம் இந்த நாட்டில் 2002 ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால் நீதிமன்றம் அதை தடுத்து நிறுத்தியது. இந்த நாட்டின் காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நான் செயற்பட்டேன். காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் எனது தாத்தா எஸ்.ஏ.விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்டது. அவர் அப்போது வடமத்திய மாகாண அரசாங்கத்தின் அரசாங்க அதிபராக பணியாற்றினார்.

டி.எஸ். சேனாநாயக்க விவசாய அமைச்சராக அநுராதபுரத்தில் உள்ள பழைய குளங்களை மேற்பார்வை செய்வதற்காக வந்தார். சில குளங்கள் புனரமைக்கப்பட்டன. பராக்கிரம சமுத்திரம் உட்பட மற்றவை புனரமைக்கப்படவிருந்தன. அதன்பின்னரே, அந்தப் பகுதி மக்களை குடியமர்த்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

காணி அபிவிருத்தி திணைக்களம் என்ற புதிய திணைக்களம் என்ற பெயரில் புதிய நிறுவனமொன்றை நிறுவவுள்ளதாக எனது தாத்தா சீ.எல். விக்ரமசிங்கவுக்கு, டி.எஸ். சேனநாயக்க அறிவித்தார். அதனை பொறுப்பேற்க வருமாறு கோரினார். அதற்குத் தேவையான சட்டங்களைத் தயாரிக்கவும் அவர் கேட்டுக் கொண்டார். அதன்படி சட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றி முதல் காணி அபிவிருத்தி ஆணையாளராகப் பதவியேற்று மக்களை இந்தப் பகுதிக்கு அழைத்து வந்து குடியமர்த்தினார். ஈர வலயத்தின் நிலமற்ற மக்களைக் குடியமர்த்தி, இந்தப் பகுதிகளில் கிராமங்களை நிறுவி, அந்தக் கிராமங்களையும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்தது. அந்த வேலைத்திட்டத்திற்காகவே இந்த சட்டம் தயாரிக்கப்பட்டது.

அவருடைய ஆவணங்களைப் படித்தபோது, ஒரு சிக்கல் எழுந்தது. அந்த சமயம் இலங்கையில் பலருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எனவே, பல்வேறு நபர்கள் வந்து அந்த நபர்களை பல்வேறு ஒப்பந்தங்களில் இணைத்து அவர்களுக்குக் கடன் கொடுத்து நிலத்தை அபகரிக்க முயன்றனர். அதன் காரணமாகவே நில உரிமை முறை உருவாக்கப்பட்டது.

1935இற்கும் இன்றைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருக்கிறது. இன்று, இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் நன்கு படித்த பட்டதாரிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்கள் இருக்கின்றனர். எனவே, இன்று அவ்வாறான நிலை ஏற்படாது. ஆனால் மக்களுக்கு அப்போது அவ்வாறான அறிவு இல்லாததால் மக்கள் ஏமாற்றப்படும் வாய்ப்பு இருந்தது.

நாங்கள் மகாவலி திட்டத்தை ஆரம்பிக்கும் போது இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். ஆனால் 10–15 ஆண்டுகளுக்குப் பிறகு அது தேவைப்படவில்லை. அந்த மக்கள் நிலங்களைப் பாதுகாத்தனர். அந்த மக்கள்

தொடர்ச்சி▼


















# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரமே ‘உறுமய’ திட்டத்தில் நில உரிமை வழங்கப்படுகிறது!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

நிலத்தை விற்க மாட்டார்கள் என்று நம்பினேன். ஆனால், அப்போது மக்கள் இந்த நில உரிமையை எதிர்பார்த்தனர். இதன்படி காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த காணிகளை வழங்குவதற்கு புதிய சட்டம் தேவைப்பட்டது. அந்த சட்ட வரைவை நான் முன்வைத்தேன். ஆனால், அத்தகைய சட்டத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது.

அந்தச் சமயத்தில் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு கிடைத்திருந்தால் 20 வருடங்களுக்கு முன்னரே மக்களின் இலவச காணி உரிமையை உறுதிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் அதன் பிறகு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிரந்தரமாக காணிகள் வழங்கப்பட்டன. காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியை ஷங்கிரிலா ஹோட்டலுக்கு வழங்க முடியுமானால் ஜனாதிபதி என்ற முறையில் 20 இலட்சம் மக்களுக்கு காணி உரிமையை ஏன் வழங்க முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன்.

இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்றார்கள். ஆனால் அதிகார வரம்பு நீதிமன்றத்திற்கு அன்றி நாடாளுமன்றத்திற்கே உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் எப்போதும் இருக்கிறேன்.

20 ஆண்டுகளுக்கு முன் செயல்படுத்தப்படக்கூடிய திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இப்போது இந்த நில உரிமைகளை மக்களுக்கு வழங்கி வருகிறோம். நான் முதன் முதலில் இந்தப் பிரதேசத்திற்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு வந்தேன். அப்போது இந்த பிரதேசம் அடர்ந்த காடாக இருந்தது. மீண்டும் 1978 ஆம் ஆண்டு அமைச்சர் காமினி திஸாநாயக்க உள்ளிட்ட குழுவுடன் இங்கு வந்து உளுஹிட்டிய திட்டத்தை ஆரம்பித்து வைத்தோம். உளுஹிடியில் இருந்து வந்த அனைவருக்கும் நிரந்தர காணி உறுதி வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்க இங்கு வந்துள்ளேன். இது உங்கள் உரிமை. இது அரசாங்கத்திற்குச் சொந்தமானது அல்ல. கொத்மலை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக பொது மக்களின் காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன.” – என்றார்










Dr.முரளி வல்லிபுரநாதன்
சமுதாய மருத்துவ நிபுணர்

# வெளிநாட்டில் வசிக்கின்ற தென்மராட்சி வைத்தியர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையைக் காப்பாற்றத் தயாரா?

சாவகச்சேரி வைத்தியசாலையைக் காப்பாற்ற வெளிநாட்டில் வசிக்கும் தென்மராட்சியைச் சேர்ந்த வைத்தியர்கள் முன்வரவேண்டும்

## காரணம் என்ன?

சாவகச்சேரி வைத்தியசாலை ஏன் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதைப் பற்றி கடந்த காலத்தில் சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட மருத்துவ நிபுணராக கடமை ஆற்றியவர் என்ற வகையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்.

இரு தசாப்தங்களுக்கு முன்னரேயே சாவகச்சேரி வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை வகை பி என அடையாளப்படுத்தப்பட்டு இருந்தது. வகை பி வைத்தியசாலை ஒன்றில் இருக்கவேண்டிய அடிப்படை வசதிகள் இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் காணப்படுகின்றன. இதில் குறிப்பிட்டுள்ள வசதிகளில் முக்கியமாகச் சத்திரசிகிச்சைக் கூடம் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய பௌதீக மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் ஆளணி வளங்கள் ஆகியன சாவகச்சேரி வைத்தியசாலையில் காணப்படவில்லை என்பது முக்கியமான குறைபாடாக உள்ளது. இவை அனைத்தையும் முழுமையாக இயக்குவதற்கு தற்போதுள்ள ஆளணியான 25 மருத்துவர்கள் போதாது என்பதையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.

எவ்வாறு இந்த இழிநிலை ஏற்பட்டது என்று ஆராய்ந்தால் 2009 வரை போர் நடக்கும் காலத்தில் வட பகுதி வைத்தியசாலைகள் அனைத்தும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்தன என்பதும், அதன் பின்னர் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்திக்குரிய அழுத்தங்களை பிரயோகிக்காததால் 2010-2018 வரை மந்த கதியிலேயே அபிவிருத்திகள் இடம் பெற்றன என்பதும் வெளிப்படை.

இப்போது தேர்தல் காலம் நெருங்கி விட்டதால் அனைத்து அரசியல்வாதிகளும் வாக்குகளுக்காகச் சாவகச்சேரி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதாகப் “படம்” போடுகிறார்கள். இவர்களில் சிலர் கடந்த காலத்தில் வைத்தியர்களிடம் கப்பம் கேட்டு அவர்களை நாட்டை விட்டுத் துரத்தியவர்கள் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

## ஊர் வைத்தியர்களும் பாத்திரவாளிகளே

2019 கோவிட், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வங்குரோத்து ஆகியவற்றால் இலங்கை முழுமையும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தாமதப்பட்டு இருந்தது. பின்னர் வந்த ரணில் அரசாங்கம் பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மீட்டதாக உரிமை கோரினாலும் அதிகரித்த வரிகளை விதித்து வைத்தியர்களையும், வைத்திய நிபுணர்களையும் நாட்டை விட்டு ஆயிரக்கணக்கில் வெளியேறும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலையில் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மருத்துவ நிபுணரும், சராசரியாக மூன்று மருத்துவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

குறிப்பாகப் பெருமளவு சத்திரசிகிச்சை நிபுணர்கள், மயக்கமருந்தியல் நிபுணர்கள் மற்றும் குழந்தை வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், பெரிய வைத்தியசாலைகளே சத்திரசிகிச்சை நிபுணர்கள் தட்டுப்பாடு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அண்மைக் காலத்தில் சாவகச்சேரிக்கு அந்த நிபுணர்களை நியமிப்பது குதிரைக்கொம்பாகவே இருக்கப்போகிறது.

எனவே இந்த இழிநிலை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஏற்பட்டதற்கு, தென்மராட்சியில் இருந்து வெளியேறிய மருத்துவர்களும் ஒரு காரணம் என்பதை அவர்கள் நேர்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## படம் போடுவோர்

அதே நேரம் சமூக ஊடகங்களில் “படம்“ போடுவோரால் எந்த நிரந்தர மாற்றமும் சாவகச்சேரியில் நிகழப்போவதில்லை. இவர்கள் பொழுதுபோக்குக்காகக் “கமெண்ட்ஸ்” போடுவார்கள். மற்றப்படி தமது Youtube வியாபாரத்தைப் பெருக்குவார்களே தவிர, உருப்படியான எதையும் செய்யப்போவது இல்லை. இதைவிட மருத்துவர்களைக்

தொடர்ச்சி▼

| Province | District | National Hospital | Teaching Hospital | Specialized Hospital | Provincial General Hospital | District General Hospital | Base Hospital Type A | Base Hospital Type B | Divisional Hospital A | Divisional Hospital B | Divisional Hospital C |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Northern | Jaffna | | TH Jaffna | | | | BHA Tellipalai<br>BHA Point Pedro | BHB Chavakachcheri<br>BHB Kytes | | DHB Atchuvely<br>DHB Chankanai<br>DHB Kopay<br>DHB Valvettithurai<br>DHB Velanai | DHC Karainagar<br>DHC Maruthenkerney<br>DHC Alaveddy<br>DHC Ampan<br>DHC Analaitivu<br>DHC Delft<br>DHC Gurunagar<br>DHC Ilavalai<br>DHC Karaveddy<br>DHC Kodikamam<br>DHC Kondavil<br>DHC Manipay<br>DHC Mandaitivu<br>DHC Vaddukoddai<br>DHC Nainativu<br>DHC Pandertharipu<br>DHC Pungudutivu<br>DHC Varani |

தொடர்ச்சி▲

குறை சொல்வோர் தமது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிக் கொண்டு வைத்தியர்கள் மாத்திரம் இலங்கையில் இருக்க வேண்டும் என்று குதர்க்கம் பேசுவார்கள்.

கடந்த காலங்களில் இடம் பெற்றதாக கூறப்படும் தவறான முகாமைத்துவம் மூலம் நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டு இருந்தாலும் அதற்குரிய நிவாரணமும் முகநூல் பதிவுகளினால் கிடைக்கப் போவதும் இல்லை.

## நடைமுறைச் சாத்தியம்

காலி முதலான தென் பகுதியில் வசிக்கும் வைத்தியர்களைக் கட்டாயப்படுத்திச் சாவகச்சேரியில் வேலை செய்ய வைத்தால் அவர்களும் மனிதப் பிறவிகளாக வீட்டுக்குப்

தொடர்ச்சி▼




# வெளிநாட்டில் வசிக்கின்ற தென்மராட்சி வைத்தியர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையைக் காப்பாற்றத் தயாரா?

**Facilities offered at Type B Base Hospitals**

The proposed facilities for Type B Base Hospitals are as follows:

1. Out Patient Department with separate Preliminary Care Unit, Accident and Emergency Care Unit, Oral Health Unit and Healthy Lifestyle Center

2. Clinic facilities

3. In ward facilities
   - 1+1 Medical Unit - Consultants 1+1
   - 1+1 Surgical Unit - Consultants 1+1
   - 1+1 Obstetrics & Gynaecology Unit - Consultants 1+1
   - 1+1 Paediatric Unit - Consultants 1+1
   - 1 Anaesthesia Unit
   - 1 Psychiatry Unit
   - 1 Eye Surgical Unit

   Second post can be filled after filling the first post in all Type B Base Hospitals

4. Intensive Care Unit

5. Operation Theatres

   One theatre complex comprising of 1 theatre for gynaecology and surgery a separate eye theatre and a theatre table for caesarean sections and a theatre table for casualties

6. Diagnostic Services
   - Radiology Unit – 1 Radiologist
   - Pathology Unit with 1 Histopathology Unit

7. Dermatology Unit

8. Pharmacy

9. Blood Bank

10. Medical Records Unit/ Health Information Management Unit

11. Planning Unit

12. Quality Management Unit

13. Health Promotion Unit

14. Infection Control Unit

1 Nephrology Unit for BHB Padaviya, BHB Kebithigolleva, BHB Welikanda, BHB Hingurakgoda, BHB Galgamuwa, BHB Polpithigama, BHB Medirigiriya and BHB Medawachchiya depending upon the service requirement.

# வெளிநாட்டில் வசிக்கின்ற தென்மராட்சி வைத்தியர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையைக் காப்பாற்றத் தயாரா?

தொடர்ச்சி▲

போகத் துடிப்பார்கள். மேலும் சாவகச்சேரியின் அபிவிருத்தியில் அவர்களுக்கு ஆர்வமும் இருக்காது. மக்களுக்கு வைத்தியர்களோடு சரளமாக உரையாடுவதற்கும் முடியாது.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் சம்பளக் கொள்கையின் படி– சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளை மீறி – அண்மைக் காலத்தில் வைத்தியசாலைகளில் தற்போது உள்ள ஆளணியை எவரும் அதிகரிக்கப் போவதில்லை.

எனவே தென்மராட்சியைச் சேர்ந்த பல வைத்தியர்களும், வைத்திய நிபுணர்களும் வெளிநாட்டில் வசதியாக இருந்து கொண்டு, "நாங்கள் 50 பவுண் அனுப்பினோம், 100 டொலர் அனுப்பினோம் ஏன் இன்னமும் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யவில்லை?" என்று சமூக ஊடகங்களில் கேட்பதை விடுத்து, உங்களுடைய ஊர் வைத்தியசாலையில் சிறிது காலம் வேலை செய்யலாம் அல்லவா?

குறிப்பாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இலவச மருத்துவக் கல்வியைப் பயின்ற பின்னர் இப்போது வெளிநாடுகளில் வேலை செய்யும் தென்மராட்சியை சேர்ந்த மருத்துவர்களும் சத்திரசிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட விசேட வைத்திய நிபுணர்களும் சிறிது காலமாவது சாவகச்சேரியில் வேலை செய்ய முன்வரவேண்டும்.

ஏனைய மாவட்டங்களில் யுத்த காலத்திலும் அதற்கு பின்னரும் பல வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் தமது சொந்த மண்ணை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டில் இருந்து வந்து சுகாதார அமைச்சின் அனுமதியுடன் அரசாங்க வைத்தியசாலைகளில் வேலை செய்திருக்கிறார்கள். எனவே நான் முன்மொழிவது புதிய ஒரு விடயம் அல்ல.

மேலும் "நாங்கள் அனுப்பிய நிதிக்கு என்ன நடந்தது?" என்று மற்றவர்களைக் கேள்வி கேட்பதை விடுத்து, மருத்துவர் அல்லாதோரிடம் நிதியை சேகரிக்கும் பணியைக் கையளித்துவிட்டு, நீங்கள் நேரடியாகவே வந்து உங்கள் பார்வையின் கீழ் நிதியைப் பயனுள்ள விடயங்களுக்குச் செலவழிக்கவும் முடியும்.

## கோரிக்கை

எனது பணிவான கோரிக்கை ஒவ்வொரு தென்மராட்சியைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை செய்யும் வைத்தியரும் மூன்று மாதம் ஆவது சாவகச்சேரியில் வந்து வேலை செய்தால் தற்போதைய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையை அதற்குரிய வசதிகளுடன் விரைவாக இயங்க வைக்க முடியும்.

இதை விடுத்து "கடந்த காலத்தில் என்ன நடந்தது?" என்று மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. முகநூல் போராளிகளுக்கு நான் கூற விரும்புவது உங்களுடைய குற்றசாட்டுகளை உண்மையான "ப்ரொபைல்" மூலம் ஆதாரத்துடன் வெளியிடுங்கள். ஆனால் அது மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தாது. சமாந்தரமாகச் சட்ட மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மிகவும் அவசியம்.

தற்போது உள்ள கேள்வி சாவகச்சேரியை சேர்ந்த வெளிநாட்டு வைத்தியர்கள் எனது கோரிக்கையை சவாலுக்கு உட்படுத்தப் போகிறார்களா அல்லது ஏனைய மாவட்ட வைத்தியர்களை போலத் தியாகத்தை செய்ய முன்வருவார்களா என்பது தான்?

"The world will not be destroyed by those who do evil, but by those who watch them without doing anything"
- Albert Einstein

# இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்ட தொல்பொருள்களை மீளப் பெற எத்தனம்

**புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு**

"தாரா தேவியின் சிலை உட்பட காலனித்துவ காலத்தில் நாட்டிலிருந்து பிரித்தானியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட பல தொல்பொருள்களை மீண்டும் இந்த நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இன்று நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதே பெரும்பாலானோரின் கருத்தாகும். ஆனால் அதற்கு மேலதிகமாக இலங்கை மக்களை சிறந்த மனிதர்களாக உருவாக்கும் பொறுப்பு எமது அமைச்சின் மீது உள்ளது. எமது அமைச்சுக்கு சிறந்த சமூகத்தினை உருவாக்குவதற்கான உத்தியோகபூர்வ வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதைக் கூற வேண்டும்.

மேலும், நாட்டுக்கும் கலாசாரத்துக்கும் தேவையான கல்வி முறை நம் நாட்டில் உருவாக்கப்படவில்லை. இந்த முரண்பாட்டினால் சமூகம் தற்போது துரதிஷ்டத்தில் தள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டின் மீது அன்பும், பெருமையும் இல்லாத ஒரு கூட்டம் உருவாகியுள்ளது. இந்நிலையில் நாடு அடிமை பூமியாக மாறலாம். எனவே அதிலிருந்து மக்களைக் காப்பாற்ற எமது அமைச்சு பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சி நிறுவனங்களில் பல வருடங்களாக கடமையாற்றிய ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இன்று நியமனம் வழங்கப்பட்டது. பல வருட கால தேவை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இது தேர்தலை இலக்காகக் கொண்ட செயல் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்காக



பத்துக்கும் மேற்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதாவது ஐந்து மாதங்களுக்கும் மேலாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், நம் நாட்டில் இருந்து இங்கிலாந்துக்கு பல தொல்பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றில் தாரா தேவி சிலையும் உள்ளது. அதன்படி, அந்த சிலை உட்பட பல புராதன பொக்கிஷங்களை இந்த நாட்டுக்கு கொண்டு வர தேவையான பணிகளை செய்து வருகிறோம். நெதர்லாந்திலிருந்தும் இதே போன்ற பல தொல்பொருள்கள் மீண்டும் எமக்குக் கிடைத்துள்ளன.

மேலும், நம் நாட்டில் சிலர் தொடர்ந்து ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளாக பிரிந்து ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால், சரியானதைச் சரியென்றும், தவறைத் தவறென்றும் பார்ப்பவர்கள்தான் நமக்குத் தேவை. அதற்கேற்ப நாட்டினதும், மக்களினதும் முன்னேற்றத்திற்காக செயற்படும் மக்களே எமக்கு அவசியம் என்பது தற்போது உணரப்பட்டுள்ளது." – என்றார்.



# ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் கோரிக்கையை ஜனாதிபதி ரணில் நிறைவேற்றினார்

ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து சிநேகபூர்வமாக உரையாடினர்.

மிகவும் வேலைப்பளுவில் இருந்த போதிலும், ஜனாதிபதி அந்த மாணவர்களுடன் கலந்துரையாடியமையுடன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்து கேட்டறிந்ததோடு, மாணவர்கள் தமது கல்லூரியின் சில குறைபாடுகள் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதிகளை வழங்கும் நீராதாரம் மிகவும் உப்புத்தன்மை கொண்டதாக காணப்படுவதால், தற்போது கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'சுழுீடயவெ' கட்டமைப்பை துரிதமாக நிர்மாணித்து தருமாறு மாணவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்குத் தேவையான பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறையைப் பெற்றுக்கொள்ளல், கணனிகள், அழகியல் பிரிவிற்கான கட்டடத்திற்கான தேவை என்பன தொடர்பில் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும் ஆனமடுவ ஜயசூரிய

தொடர்ச்சி▼









# ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் கோரிக்கையை ஜனாதிபதி ரணில் நிறைவேற்றினர்

தொடர்ச்சி▲

மகா வித்தியாலய மாணவர்கள் சிறந்து விளங்குவதைப் பாராட்டிய ஜனாதிபதி, அவர்களின் எதிர்காலக் கல்விப் பணிகள் சிறக்கத் தனது ஆசிர்வாதத்தையும் தெரிவித்தார்.


அதன் பின்னர், மாணவர்கள் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரையும் சந்தித்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள், மாணவர்களின் விளையாட்டு மற்றும் கலைத்திறன்களை மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய அதிபர் லக்ஷ்மன் அபேசிங்க மற்றும் ஆசிரியர்கள் சிலரும் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டனர்.







# உலகப்புகழ் பெற்ற ஜெகன்நாதர் கோவில் பொக்கிச அறை மீண்டும் திறக்கப்பட்டது

உலகப்புகழ் பெற்ற பூரி ஜெகன்நாதர் கோவிலின் பொக்கிச அறை 46 ஆண்டுகளுக்கு பிறகு திறக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தவகையில், ரத்னா பந்தர் என்னும் அந்த பொக்கிச அறை நேற்று முன்தினம் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் ஒடிசா மாநிலம் பூரியில் 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த கோவிலுக்கு பல்வேறு கால கட்டங்களில் அங்கு ஆட்சி செய்த மன்னர்கள் தங்கம், வைரம், வைடூரியம் என விலை மதிப்பில்லா நகைகளை காணிக்கையாக அளித்துள்ளனர்.

இந்த நகைகள் அனைத்தும் ஜெகன்நாதர் கோவிலின் தரைப்பகுதிக்கு கீழே சுரங்க அறை ஏற்படுத்தி அதற்குள் குவித்து வைக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்த அறை கடைசியாக 1978 இல் திறக்கப்பட்டபோது அதை அருகில் இருந்து பார்த்தவர்கள் நகைகள் அனைத்தும் துணியில் சுற்றி மரப்பெட்டியில் வைக்கப்பட்டு இருந்ததாகவும் அறைகள் தரைக்கு கீழேயும் கடல் பகுதியை ஒட்டியும் இருந்ததாகவும் கூறியுள்ளனர்

எனவே பொக்கிச அறை குறித்து ஆராய 1984 இல் தொல்லியல் துறை குழு அய்வு செய்ய சென்ற போது, பொக்கிச அறையின் நிலமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் பாம்புகள் உள்ளே இருக்கின்றன என கூறி ஆய்வுக்குழு திரும்பி வந்து விட்டது.

குறிப்பாக 2018 ஆம் ஆண்டில் பொக்கிச அறையின் சாவி காணாமல் போனதாகவும் ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகி விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறான நிலையில் தான் 46 ஆண்டுகளுக்கு பிறகு தொல்லியல் துறை அதிகாரிகள் அரசு அதிகாரிகள் என பல்வேறு தரப்பினர் முன்னிலையில் நேற்று முன்தினம் பொக்கிச அறை திறக்கப்பட்டு அதில் உள்ள நகைகளை மதிப்பிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டு பணிகள் மிகவும் இரகசியமாக நடைபெற்று வருவதால் பணிகள் முடிய சுமார் 70 நாள்கள் வரை ஆகலாம் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# எக்ஸ் தளத்தில் பிரபலமானார் இந்திய பிரதமர் நரேந்திர மோடி






இந்திய பிரதமர் மோடியை எக்ஸ் வலை தளத்தில் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 100 மில்லியனை (10 கோடி) கடந்துள்ளது.

உலக அளவில் எக்ஸ் தளத்தில் அதிக பின்தொடர்பவர்களை கொண்ட 7 ஆவது பிரபலமாக உள்ளார் இந்திய பிரதமர் மோடி உள்ளார்.

அத்துடன், எக்ஸ் வலை தளத்தை மட்டுமல்லாது, ஏனைய அனைத்து சமூக வலை தளங்களிலும், சில அரசியல் தலைவர்கள் பிரபல்யமாக இருப்பார்கள்.

அந்தவகையில் இந்திய பிரதமர் மோடியை அனைத்து சமூக வலை தளங்களிலும் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே, எக்ஸ் வலை தளத்தில் பிரதமரை பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 100 மில்லியன் (10 கோடி) ஆக அதிகரித்து உள்ளது.

இதற்கடுத்ததாகவே, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் (38.1 மில்லியன்), டுபாய் ஆட்சியாளர் ஷேக் முகமது (11.2 மில்லியன் ) மற்றும் போப் பிரான்சிஸ் (18.5 மில்லியன்) ஆகியோர் உள்ளனர்.

இந்தியாவிலுள்ள அரசியல் தலைவர்களை அதிகமாக பின்தொடர்பவர்களின் பட்டியலிலும் மோடியே முதலிடத்தில் உள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி க்கு 26.4 மில்லியன் , டி ல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு 27.5 மில்லியன் சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் (19.9 மில்லியன்), மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி (7.4 மில்லியன்), ராஷ்ட்ரீய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் மற்றும் என்சிபி (எஸ்பி) தலைவர் சரத் பவார் (2.9 மில்லியன்) என அடுத்தடுத்து உள்ளனர்.

அரசியல் வாதிகளை தவிர விராட் கோலி (64.1 மில்லியன்), பிரேசில் கால்பந்து நட்சத்திரம் நெய்மர் ஜூனியர் (63.6 மில்லியன்), அமெரிக்க கூடைப்பந்து வீரர் லெப்ரான் ஜேம்ஸ் (52.9 மில்லியன்) உள்ளிட்டோரும் பிரதமருக்கு அடுத்த நிலையிலேயே உள்ளனர்.

எக்ஸ் வலை தளத்தை தவிர்த்து பிரதமரை யூடியூப்பில் 25 மில்லியன், இன்ஸ்டாகிராம் கணக்கில் 91 மில்லியன் பேரும் பின் தொடர் கின்றனர்.

மோடியின், எக்ஸ் வலைத்தளம் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் சுமார் 30 மில்லியன் பின்தொடர்பவர்கள் அதிகரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இம்ரான் கட்சியைத் தடை செய்ய பாகிஸ்தான் அரசு நடவடிக்கை

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பி.டி.ஐ) கட்சியைத் தடை செய்ய ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத் தகவலை அந்த நாட்டு அமைச்சர் அத்தாவுல்லா தரார் உறுதிப்படுத்தியுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி பாகிஸ்தானின் மிகப்பெரிய எதிர்க் கட்சியாத லால் இது அந்த நாட்டு அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



பி.டி.ஐ. கட்சிக்குத் தடை விதிக்க இருப்பதற்கான காரணங்கள் குறித்து செய்தியாளர்கள் கேள்விக்குப் பதிலளித்த அத்தாவுல்லா தரார்,

“பி.டி.ஐ. கட்சி தேச விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளது. சட்டவிரோதமாக வெளிநாட்டு நிதிகளை அக்கட்சி பெற்றுள்ளது. அதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. வெளிநாட்டு நிதியுதவி வழக்கு, மே 9 கலவரம் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இம்ரான்கானின் கட்சியைத் தடை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் பி.டி.ஐ. கட்சிக்குத் தடை விதிப்பது தொடர்பாக மனுத்தாக்கல் செய்யவுள்ளோம். மேலும், இம்ரான்கான் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யவும் இந்த அரசு முடிவு செய் துள்ளது.” -என்றார்.

# உதை பந்தாட்ட ரசிகர்கள் நிரம்பியிருந்த விருந்தகத்தில் குண்டு வெடிப்பு; பலர் பலி

சோமாலிய தலைநகர் மொகடிஷூவில் உள்ள உதை பந்தாட்ட ரசிகர்கள் நிரம்பியிருந்த விருந்தகத்திற்கு வெளியே குண்டு வெடித்ததில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து உதை பந்தாட்ட யூரோ 2024 இறுதிப் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

அந்த விருந்தகத்திற்கு வெளியில் கார் ஒன்றில் குண்டு வெடித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் 9 பேர் கொல்லப்பட்டதுடன், 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



# தேர்தலை வாக்குகள் மூலம் எதிர்கொள்ள வேண்டுமே தவிர தோட்டாக்களால் அல்ல

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிப்பு

டொனால்ட் ட்ரம்புக்கும் தனக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தாம் எதிரிகள் அல்ல என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அந்த நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எனது சக அமெரிக்கர்களே! நம் அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க விரும்புகிறேன். எனக்கும் ட்ரம்புக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் நாங்கள் எதிரிகள் இல்லை என்பதை உணர்த்த விரும்புகிறேன்.

நாம் அனைவரும் அமெரிக்கர்கள் என்ற வகையில் ஒன்றுபட்டு நிற்பது அவசியம். தேர்தலை வாக்குகள் மூலமாகத் தான் எதிர்கொள்ள வேண்டுமே



தவிர தோட்டாக்களால் அல்ல.

அமெரிக்காவின் வரலாற்றை மாற்றும் உரிமை மக்களின் கைகளில் தான் இருக்க வேண்டுமே தவிர கொலையாளிகளின் கைகளில் இருக்கக் கூடாது. தாக்குதலுக்குப் பின்னர் ட்ரம்ப் நலமாக இருக்கிறார் என்பதை அறிந்தேன்.

இத்தாக்குதலில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல். அவரது குடும்பத்துக்கு எங்களது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரின் இலக்கு என்னவென்பது இன்னும் தெரியவில்லை. குற்றத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைப் பற்றிய விசாரணைகளை பொலிஸ்துறை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அவரது ஆதரவாளர் கொல்லப்பட்டுள்ளார். அமெரிக்கா இதுபோல் கீழ் நிலைக்கு இறங்கக்கூடாது. அமெரிக்காவில் இதுபோன்ற வன்முறைக்கு இடமில்லை.

வன்முறை எப்போதும் எதற்கான விடையையும் பெற்றுத் தந்ததில்லை. இத்தகைய வன்முறைச் சம்பவங்களை நம் நாட்டில் அனுமதிக்கவே முடியாது.

அமெரிக்கர்கள் எதிரெதிர் அரசியல் கருத்துகளைக் கொண்டவர்களை மதிக்க வேண்டும். நம் சமூகத்தைப் பிரிக்க அந்நிய சக்திகள் முயற்சிக்கலாம் அதற்கு நாம் இரையாகி விடக்குடாது.” - என்றார்.



# 2024 இல் விவசாய ஏற்றுமதி துறையில் மிகத் தெளிவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது

## விவசாய, பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் தர்மகீர்த்தி தெரிவிப்பு

"கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது."

– இவ்வாறு விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி தெரிவித்தார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே.தர்மகீர்த்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"2022 உடன் ஒப்பிடும்போது, 2023 இல் விவசாய ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது. அதன்படி எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள் காரணமாக 2024 இன் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சியை உருவாக்க முடிந்தது.

இக்காலத்தில் நிலவிய காலநிலை விவசாயத்துக்கு சாதகமாக இல்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். இத்தகைய சவால்களை எதிர்கொண்டு அடைந்த முன்னேற்றம் உண்மையில் வெற்றியாகும் என்பதையும் கூற வேண்டும்.

உதாரணமாக, 2023 ஏப்ரல் மாதமாகும்போது, தேயிலை மூலம் கிடைத்த 407.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம், 2024 ஏப்ரல் மாதத்தில் 450.5 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மேலும், 2023 ஏப்ரல் மாதத்திற்குள் தேங்காய் ஏற்றுமதி மூலம் 212 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்தது. அது 2024 ஏப்ரல் மாதமாகும்போது 263 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரல் மாதத்தில் 299 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2024 ஏப்ரல் இல் 335 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மேலும், இதே காலப்பகுதியில் கறுவா ஏற்றுமதி வருமானம் 53.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 56.1 மில்லியனாகவும், மிளகு ஏற்றுமதி வருமானம் 13.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 14 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது.

விவசாயமானது தொடர்ந்து ஏற்ற இறக்கம் ஏற்படும் துறையாகும். கடந்த காலத்தில் தேயிலை உற்பத்தி குறைந்ததால் உரத்தின் தேவை அதிகரித்தது. அதன்படி உரம் வழங்கும் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். ஒவ்வொரு 50 கிலோ உர மூட்டைக்கும் 2000 ரூபா மானியத்தில் உரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போது, 10,000 மெட்ரிக் தொன் தேயிலை உரம் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. எஞ்சிய 20,000 மெட்ரிக் தொன் மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கு மேலதிகமாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களை இணைத்துக் கொண்டு, உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மொத்தமாக தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 745 ஹெக்டேயரில் தேயிலை மீள் நடுதல் மற்றும் நேரடி பயிர்ச்செய்கை தொடர்பான மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் கீழ் 324 விவசாயிகளுக்கு 140 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கு 60 மில்லியன் ரூபாயை ஒதுக்கி 800,000 தேயிலை செடிகளை நடும் புதிய திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கை தேயிலைச் சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை நேரடி தேயிலை பயிர்ச்செய்கை திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்காக 750 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படவுள்ளது.

தற்போது, தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் மட்டை சார்ந்த உற்பத்திகளும் இந்நாட்டிற்கு வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித் தருகின்றது. 2022 ஆம் ஆண்டில், தேங்காய் சார்ந்த ஏற்றுமதி மூலம் 817 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், வெள்ளைப் பூஞ்சு நோய் காரணமாக தேங்காய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டாலும் கூட, சரியான ஒழுங்குபடுத்தல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பயன்படுத்தியன் ஊடாக 700 மில்லியன் அமெரிக்க டொலரை நாட்டிற்கு வருமானமாகக் கொண்டு வர முடிந்தது. 2024 ஏப்ரல் மாத நிலவரப்படி, 263.06 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24 வீத வளர்ச்சியாகும்.

2022, 2023 ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட, புதிய இறப்பர் பயிர் பரப்பளவு 921 ஹெக்டேயராகவும், மீள் நடவு செய்யப்பட்ட இறப்பர் பரப்பளவு 2743 ஹெக்டேயராகவும் உள்ளது. 2024 இல் 1135 ஹெக்டேயர் இறப்பர் பயிரிட திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதில், 605 ஹெக்டேயரில் புதிதாகப் பயிரிடலும், 415 ஹெக்டேரில் மீள்நடுகையும் செய்யப்படும். இதற்காக பயிர்ச்செய்கைக்குத் தேவையான செடிகளை வழங்குவதற்கு 149 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் காணப்பட்ட இறப்பர் விவசாய மானிய முறை 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படாது. மேலும் 2023 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு மானியமாக திணைக்களம் இலவசமாக செடிகளை வழங்குகின்றது."

– என்றார்.



# இன்றைய ராசி பலன்கள் -16.7.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றம் தாமதமாக ஏற்படும். இதனால் கவலை ஏற்படும். பயணங்கள் ஆறுதல் அளிக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. பணிகளில் தவறுகள் நேரலாம். உங்கள் செயல்திறனைக் கண்டு மேலதிகாரிகள் அதிருப்தி அடைவார்கள்.

இன்று இருவரிடையே மகிழ்ச்சி காணப்படாது. மந்தமான மனநிலை காரணமாக இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை காணப்படாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தோல் அரிப்பு ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உங்கள் சமயோசித புத்தி மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் செயல்திறன் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வோடு நடந்து கொள்வீர்கள். இது உறவை இன்னும் பலப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும்.காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும்.

உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் மற்றும் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகளை இன்று நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும். இதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற இயலும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நம்பிக்கையோடு வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் பிணைப்பும் அதிகரிக்கும்.

நிதிநிலைமை இன்று பிரகாசமாக இருக்கும்.பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்களின் உறுதியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




முக்கிய விஷயங்களை இன்று தொடங்குவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். பிறருடன் பேசும் போது கவனம் சேவை. பிரார்த்தனை மூலம் அமைதி பெறலாம்.

இன்று பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நன்மை காண பொறுமை அவசியம். இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

கண் வலி மற்றும் முதுகு வலிக்கான வாய்ப்பு உள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனால் தன்னம்பிக்கை இழக்க நேரிடும். இதயம் கனப்பதாக உணர்வீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. இதனால் கவலை ஏற்படும். சக பணியாளர்களுடனான உறவு முறை சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு பணம் கரையும். இன்று பணத்தை சேமிக்க இயலாது.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலைவலி காணப்படுகின்றது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் அக்கம்பக்கதினர்கள் ஆதரவாக இருப்பார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலனளிக்கும்.

உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் அபாரமான திறமையைக் கண்டு சக பணியாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கான சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பங்கு போன்ற இதர வகைகள் மூலமாகவும் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் இருப்பீர்கள்.




இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். எளிதில் வெற்றி காண்பதை கடினமாக உணரவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். பாதுக்கப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் பணிகளை திறமையாக செயல்படுத்த இயலாது.

உங்கள் உறவில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. உங்களின் நெருங்கிய நபர் ஒருவருடைய உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று திருப்தி குறைந்து காணப்படும். கவனமாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்களை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும். இதனால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க முடியும்.

அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக பண இழப்பு நேரலாம். இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை ஆறுதல் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.07.2024




இன்று மந்த நிலையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளை ஒப்படைக்கும் முன்பு சரிபார்த்து தருவது சிறந்தது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். என்றாலும் அகந்தை உணர்வு தலை தூக்கும். அதனைத் தவிர்த்து இருவரும் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். இன்று அதிகமாக சேமிக்கவும் இயலாது.

இன்று ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும். உங்கள் தந்தையின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று அபாரமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை உங்கள் நெருங்கிய உறவுகளை மகிழ்ச்சி யுறச் செய்யும். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். சக பணியாளர்களுக்கு நீங்கள் உதாரணமாக இருப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இருவரும் சிறந்த ஜோடியாகத் திகழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக் இருக்கும். உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை மூலம் இலக்கில் வெற்றி பெறுவீர்கள். ஸ்திரமான முடிவுகள் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் நேர்மையான முயற்சி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் இருவரும் நல்ல தொடர்புடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெளியிடங்களுக்குச் சென்று ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வளர்ச்சியில் தாமதங்கள் காணப்படும். விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். வெற்றி பெறுவதற்கு திறமையாக கையாள வேண்டும்.

உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே சமநிலையோடு இருந்து உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். சேமிப்பதில் கட்டுப்பாடு காணப்படும். இந்தச் சூழ்நிலைகளை விவேகத்துடன் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். தக்க நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும்.





